# CHALLENGES OF WOMEN POLITICAL PARTICIPATION IN SRI LANKA: WITH SPECIAL REFERENCE TO KALMUNAI MUSLIM DIVISIONAL SECRETARIAT


**M.Y.M. Yoosuff Imran**
Department of Political Science
South Eastern University of Sri Lanka
*mymy.imran@gmail.com*



**ABSTRACT:** Political participation is the key elements of making democracy. Political Participation means in electoral processes involves just much more than voting, political participation derives from the freedom to speak out, assemble and associate, the ability to take part in conduct of public affairs and the opportunity to register as a candidate, to campaign, to be elected and to hold office at all level of government. This research has been doneonchallenges of Women Political Participation in Kalmunai Muslim Divisional Secretariat. Kalmunai Muslim Divisional Secretariat is the one of the Divisional Secretariats of Ampara District in Sri Lanka.The research area consists of Kalmunai, Maruthamunai, Natpittimunai and Islamabath villages and also 29 Grama Niladari Divisions. This research area belongs to majority of Muslims. Tamils, Sinhalese and Christians are minority. Majority of this Divisional Secretariat are women. This research has been done in order to find out the reasons for the lack of women political participation and to enhance opportunities for that women political participation in this Secretariat. The data used here are qualitative and they have been collected from primary data which are limited observation and interviews and the secondary data such as books, magazines and internet. According to this research, we are able to know the reason for lack of women political participation of this Divisional Secretariat. Some of them are major factors lack of interest in politics to the women, lack supports from the family. Women don't come forward to vote for women, affect of culture and women's frightening tendency toward violence and weakness of women societies.



**Key words:** Women, Political Participation, Divisional Secretariats, Elections


## அறிமுகம் (Introduction)

ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சியைக் குறிக்கின்றது. ஒரு நாட்டினுடைய ஜனநாயகப் பண்புகளில் மிக இன்றியமையாத பண்பாக அரசியல் பங்குபற்றுதலைக் குறிப்பிடலாம்.அரசியல் பங்குபற்றுதல் எனும் எண்ணக்கருவினை தேர்தலில் போட்டியிடல், மற்றும் வாக்களித்தல் எனும் இரு அம்சங்களினூடாக சுருக்கிக் கொள்வதையே பரவலாகக் காணக்கூடியதாக உள்ளது. ஆனால் அரசியல் பங்குபற்றுதல் எனும் எண்ணக்கரு பரந்தளவான அரசியல் அம்சங்களினை தன்னகத்தே கொண்டு காணப்படுகின்றது.

அரசியல் பங்குபற்றுதல் எனும் எண்ணக்கருவினை தீர்மானம் மேற் கொள்ளல், கொள்கை உருவாக்கம், கொள்கை அமுலாக்க செயன்முறையில் பிரஜைகள் நேரடியாக உள்வாங்கப்படுவதைக் குறிக்கின்றது. ஒரு நாட்டினுடைய அரசியல் பங்குபற்றுதலில் ஆண், பெண் இரு பாலாரினையும் கொண்டதாகக் காணப்படுகின்ற போது அதன் பூரண வெற்றியாகக் காணப்படும். அந்த வகையில் அரசியல் பங்குபற்றுதல் வழிமுறைகளாக தேர்தலில் வாக்களித்தல், நலன் பேண் குழுக்கள் தேர்தல் கட்சி நடவடிக்கைகளில் ஈடுபடல், சட்ட மன்ற உறுப்பினர்களுடன், அரசியல் கருத்துக்களை மக்கள் மயப்படுத்தல், தேர்தல் பிரச்சாரங்களில் ஈடுபடல், என்பவற்றைக் குறிப்பிடலாம்.(சர்ஜுன்.றிபான்,2011) இலங்கையில் பெண்கள் அரசியல் பங்குபற்றுதலானது வாக்குரிமைப் போராட்டத்துடன் 20ம் நூற்றாண்டின் ஆரம்ப கால கட்டத்திலேயே ஆரம்பமாகியது. இலங்கையில் முதலாவது பெண் உறுப்பினராக எட்லின் மொலமுரே குறிப்பிடலாம்(சரவணன்,2002).பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் தந்தை அல்லது கணவரின் செல்வாக்கிற்கு உட்பட்டதாகவே காணப்பட்டது. ஆண்களின் செல்வாக்கின்றி தேர்தலில் போட்டிடுபவர்கள் அரிதாகவே காணப்படுகின்றனர்.

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகம் கிழக்கு மாகாணத்தின் அம்பாறை மாவட்டத்தில் உள்ள 20 பிரதேச செயலகங்களில் ஒன்றாகும். கல்முனை, மருதமுனை, நற்பிட்டிமுனை மற்றும் இஸ்லாமாபாத் ஆகிய 29 கிராம அலுவலகர் பிரதேசங்களை உள்ளடக்கியதாகும். 2012ம் ஆண்டின் சனத்தொகை கணக்கெடுப்பின் படி 48.94% ஆண்களும் 51.06% பெண்களும் காணப்படுகினறனர். இங்கு முஸ்லிம்கள் பெரும்பாண்மையாகவும் தமிழ்,கிறிஸ்தவ மற்றும் சிங்களவர்கள் சிறுபாண்மையாகவும் வாழ்ந்து வருகின்றனர்(கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகம்).எனவே கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் உள்ள பெண்கள் கல்வி ரீதியில் முன்னேற்றம் அடைந்துள்ள போதிலும் அரசியல் பங்குபற்றுதலில் ஆர்வம் குறைவாக காணப்படுகின்றது. இதனை ஆய்வுப் பிரச்சினையாகக் கொண்டு இவ்வாய்வானது மேற் கொள்ளப்படுகின்றது.

**நோக்கம் (Objective)**

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் உள்ள பெண்கள் கல்வியறிவுமிக்கவர்கள்,மருத்துவர்கள், ஆசிரியர்கள், பட்டதாரிகள் என பல்வேறு துறைகளிலும் முன்னிலை பெற்று விளங்குகின்ற போதிலும் அரசியல் பங்குபற்றுதலில் ஆர்வமின்றிக் காணப்படுகின்றனர். கல்முனை முஸ்லிம் பிரதேச செயலக பெண்கள் அரசியல் பங்குபற்றுதலில் உள்ள சவால்களைக் கண்டறிதல் அத்துடன் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கான வாய்ப்புக்கள் மற்றும் சந்தர்ப்பங்கள் ஆகியவற்றை இனங்காண்பதே இவ் ஆய்வின் நோக்கமாகும்.

**ஆய்வு முறையியல் (Methodology)**

இவ் ஆய்வானது விபரண ரீதியான பகுப்பாய்வு மாதிரியினை அடிப்படையாகக் கொண்டதாகும். இங்கு பண்புசார் தரவுகள் பயன்படுத்தப்பட்டுள்ளதுடன் அத்தரவுகள் முதன்நிலை மற்றும் இரண்டாம்நிலைத் தரவு மூலாதாரங்களிலிருந்து பெறப்பட்டுள்ளன. முதன் நிலைத்தரவுகள் மட்டுப்படுத்தப்பட்ட அவதானம், நேர்காணல் ஆகிய ஆய்வு நுட்பங்களைக் கொண்டும் இரண்டாம் நிலைத்தரவுகள் பொருத்தமான நூல்கள், சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றிலிருந்தும் சேகரிக்கப்பட்டுள்ளன. நேர்காணலானது பொதுமக்கள்,அரசியல் ஆர்வலர்கள், இல்லத்தரசிகள், ஆசிரியைகள் ஆகியவர்களிடமிருந்து தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

**முடிவும் கலந்துரையாடலும் (Results & Discussion)**

கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் குறைவாக காணப்படுவதற்கான காரணிகளைக் கண்டறியும் நோக்குடன் மேற்கொள்ளப்பட்ட இவ் ஆய்வானது அவதானம், நேர்காணல் மற்றும் அரசியல் பங்குபற்றுதல் தொடர்பான நூல்கள் சஞ்சிகைகள், இணையத்தளம் என்பவற்றினூடாக பெறப்பட்ட தகவல்களைக் கொண்டு மேற்கொள்ளப்பட்டதிலிருந்து பல்வேறு விடயங்கள் பெறப்பட்டிருக்கின்றன. அவற்றைப் பின்வருமாறு நோக்கலாம்.

- ✓ **அரசியலில் ஆர்வம் காட்டாமை**

இப்பிரதேசத்தில் வாழுகின்ற தமிழ் மற்றும் முஸ்லிம் பெண்கள் பல்வேறு துறைகளான மருத்துவம், ஆசிரியர் துறை, நிருவாகம், சட்டத்துறை என்பவற்றில் அபரிதமான ஆர்வத்தில் இருப்பதுடன் கல்வித்துறை சார்பாக பல உயர் பதவிகளில் காணப்படுகின்ற போதிலும் அரசியலைப் பொறுத்தவரையில் ஆர்வமின்றிக் காணப்படுவதுடன் தங்களுடைய கட்டாய உரிமைகளில் ஒன்றாகிய வாக்குரிமை விடயத்திலும் அதிக ஈடுபாடு காட்டாமல் இருப்பதை காணக்கூடியதாக உள்ளது என்பதை PAFFREL அறிக்கையின் படி காணக்கூடியதாக உள்ளமையானது பெண்களுக்கு அரசியல் தொடர்பான விழிப்புணர்வு குறைவாகவே காணப்படுகின்றன என்பதை சுட்டிக்காட்டுகின்றது.

- ✓ **கிராமிய அபிவிருத்தி சங்கங்களில் பெண்களின் ஈடுபாடு குறைவாக காணப்படுதல்**

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களை முன்னெடுக்கும் மிக முக்கிய நிறுவனமாக கிராமிய அபிவிருத்தி சங்கங்கள் காணப்படுகின்றன. அப் பிரதேசத்தின் அபிவிருத்தி திட்டங்களுக்கான கொள்கை தீரமானங்களில் பெண்களின் ஈடுபாடு குறைவாக இருப்பதும் பெண்களுக்கான உரிய வகிபாகம் வழங்கப்படாத நிலை காணப்படுகின்றன.

- ✓ **குடும்ப சுமை மற்றும் அங்கத்தவர்களின் ஆதரவு கிடைக்காமை**

சமகால குடும்ப நிருவாகம் பெண்களுடைய தலைமைத்துவத்தின் கீழ் குடும்ப நிருவாகம் மற்றும் பொறுப்புக்கள் வழங்கப்பட்டு சிறப்பான முறையில் இயங்கி வருகின்றன. இந்நிலையில் பெண்களில் காணப்படும் நிருவாகத் திறமையை அரசியலில் உள்வாங்கி சிறப்பான ஆட்சியை வழங்க ஒரு பெண் முன் வர முயற்சித்தால் அப் பெண்ணின் முயற்சிக்கான முதல் தடையாக அப் பெண்ணுடைய குடும்பமே காணப்படுகின்றது மேலும்குடும்ப ரீதியான சுமைகள் அதிகமாக காணப்படுவதும் தனது குடும்ப தேவையைப் பூர்த்தி செய்யவே நேரம் போதுமானதாக இருப்பதும் பெண்கள் அரசியல்ஈடுபட முடியாமைக்கான காரணிகளில் ஒன்றாக உள்ளது.

- ✓ **பெண்கள் வாக்களிக்க முன்வராமை**

இவ்வாய்வின் மூலமாக அவதானித்த ஒரு அம்சம் என்னவெனில் ஒரு பெண் வேட்பாளராக போட்டியிட முன் வருகின்ற போது அப்பெண்ணை வரவேற்று, உற்சாகமளித்து ஆதரவளிக்கக்கூடிய மனநிலையில் ஏனைய பெண்கள் காணப்படவில்லை. மாறாக அப் பெண் தொடர்பாக அவதூறு பேசுவதும் அப் பெண்ணின் முயற்சிகளுக்கு இடையூறாக இருப்பவர்களாகவே காணப்படுகின்றனர். தமது உரிமைகள் தொடர்பாக பேசுவதற்கு முன்வந்த பெண்ணுக்கு வாக்களிக்காமல் தன் கணவர் மற்றும் குடும்ப உறுப்பினர்கள் குறிப்பிட்டுக் கூறுகின்ற வேட்பாளருக்கு வாக்களிக்கும் மனநிலையே குறிப்பாக இத்தேர்தல் பெண்களிடம் காணப்படுகின்றது. Eg: கடந்த பாராளுமன்றத் தேர்தலில் TNA சார்பில் அன்னம்மா எனும் பெண்மணி போட்டியிட்ட போதிலும் அவர் குறைந்தளவான வாக்குகளைப் பெற்றமையைக் குறிப்பிடலாம்.

✓ **அரசியல் கட்சிகள் முன்வராமை**

அரசியல் கட்சிகள் அதிகாரத்தை பெறுவதையே நோக்கமாகக் கொண்டிருப்பதனால் வெற்றி பெறக்கூடியவர்கள் என கருதுகின்றவர்களை தேர்தலில் வேட்பாளர்களாக களமிறக்குகின்றன. தமது கட்சியில் மகளிர் பிரிவுகள் காணப்படுகின்ற போதிலும் அவற்றினை தேர்தல் காலங்களில் பெண்களின் வாக்குகளைப் பெறுவதற்காக பயன்படுத்துகின்ற நிலை காணப்படுகின்றதே தவிர சமூக நலன் கருதி பெண் வேட்பாளர்களை களமிறக்கி அவர்களை வெற்றிபெறச் செய்து பெண்களின் பிரதிநிதித்துவத்திதை பெறுவதற்கு முன்வராமலே இருக்கின்றன. தமது கட்சியில் செல்வாக்கிற்கு உட்பட்ட பெண்களை தேர்தலில் போட்டியிட சந்தர்ப்பம் வழங்கப்பட் போதிலும் அவர்களால் வெற்றி பெற முடியாத நிலை காணப்படுவதும் சுட்டிக்காட்டலாம். Eg: அன்னம்மா

✓ **இறுக்கமான கலாசார செல்வாக்கு**

தமிழ் மற்றும் முஸ்வலிம் சமூகத்தினரிடையே இறுக்கமான சமூகக் கட்டுப்பாடு காணப்படுகின்றது. இதனால் பெண்கள் தமது கலாசாரம், மதத்தின் செல்வாக்கு, தமது குடும்பக்கட்டுப்பாடு, சமூக அவப் பெயர் போன்ற காரணிகளினாலும் அரசியல் பங்குபற்றுதல் குறைவாக காணப்படுகின்றது. இவ்வாறான சூழ்நிலையில் பெண் பிரதிநிதி தமது மக்களின் தேவைகள் தொடர்பாக பல்வேறு நபர்களுடன் கலந்துரையாடல், அடிக்கடி தனிமையில் பிரயாணம் செய்தல் அல்லது சக உறுப்பினர்களுடன் பிரயாணம் செய்ய வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. இவ்வாறான சந்தர்ப்பங்களில் பாதுகாப்பின்மை போன்ற காரணிகளைச் சுட்டிக் காட்டி பெண்கள் அரசியலுக்குள் முன்வர மறுக்கின்றனர்.

✓ **அரசியல் மற்றும் தேர்தல் பற்றிய அச்சம்**

பெண்கள் பாலின அடிப்படையில் உடல், உள, ரீதியாக வலிமை குறைந்தவர்களாகக் காணப்படுவதனால்இந்நிலையில் சமகால அரசியல் போக்கானது வன்முறை, தேர்தல்களின் போது பல்வேறு வகைகளிலும் தேர்தல் சட்ட மீறுதல்கள் இடம்பெறுவதன் காரணமாக பெரும்பாலான தேர்தலில் வாக்களிக்க வாக்களிப்பு நிலையங்களுக்கு செல்லாமல் தமது வீடுகளிலே இருக்கின்றனர். இந்நிலையில் பெண்கள் அரசியல் ரீதியான வன்முறைக்குப் பயந்து ஒதுங்கி வாழுகின்றனர்.

✓ **மகளிர் சங்கங்களின் வினைத்திறனற்ற செயற்பாடு.**

இப்பிரதேச மகளிர் சங்கங்கள் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்கு மாற்றமாக வாழ்வாதார நடவடிக்கைக்கு முக்கியத்துவம் வழங்குகின்ற நிலை காணப்படுகின்றன. மேலும் இப்பிரதேச மகளிர் சங்கங்கள் பலமிழந்த தன்மை மற்றும் வினைத்திறனற்ற செயற்பாடு, பதிவு இலக்கத்தை கொண்டதொரு அமைப்பாகவே காண்படுகின்றன.

**பரிந்துரைகள் (Recommendation)**

பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை அதிகரிப்பதற்காக மகளிர் அமைப்புக்கள், சிவில் அமைப்புக்கள், தன்னார்வ தொண்டு நிறுவனங்களின் மூலமாக அரசியல் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை கிராம சேவகர் பிரிவின் ஊடாக நடாத்துதல் வேண்டும். அக்கருத்தரங்குகளில் பெண்களின் அரசியல் உரிமைகள், கடமைகள் என்பவற்றின் அவசியத்தினை வலியுறுத்துவதுடன் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் இடம் பெறாமையின் மூலமாக எதிர் காலத்தில் ஏற்படக் கூடிய சுட்டிக் காட்டுவதை கருத்தரங்குகளை நடாத்துவதன் மூலம் இத் தேர்தல் தொகுதியில் அரசியல் பங்குபற்றுதலை பெண்கள் பெறக்கூடிய வாய்ப்புக்கள் காணப்படும்.

தேர்தலில் போட்டியிட விரும்பும் பெண்களை முன்னுரிமை வழங்கி வழி காட்டுபவர்களாக குடும்ப அங்கத்தினர் காணப்படவேண்டும். குடும்ப உறுப்பினர்களில் அப் பெண்ணின் கணவர் அப்பெண்ணின் அரசியல் செயற்பாடுகள் அனைத்துக்கும் உறுதுணையாகவம், உதவி புரிபவராகவும் காணப்படுதல் வேண்டும். சமூக ரீதியான அவப் பெயர் ஏற்பட்டு அப்பெண் சோர்வடைந்து கவலையடைகின்ற சந்தர்ப்பத்தில் உற்சாகமாளிக்கக்கூடியவராக காணப்படுவதுடன் இப் பெண் வேட்பாளரின் வெற்றிக்கு முழு மூச்சாக உழைத்தல் வேண்டும்.

பெண் வேட்பாளர் போட்டியிட முன் வருகின்ற போது இப்பிரதேச ஏனைய பெண்கள் அப்பெண்ணின் இம் முயற்சியிக்கு ஆதரவளித்து அப்பெண்ணுக்கு பக்கபலமாக இருந்து செயற்படுதல் வேண்டும். மேலும் குறித்த அப்பெண் வேட்பாளரை வெற்றிபெறச் செய்வதற்காக தமது வாக்குளை வழங்க வேண்டும்.

அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில் தமது வேட்பு மனுப் பத்திரத்தினை குறித்ததொரு பெண் வேட்பாளரை இணைத்து அவரது வெற்றிற்கு பின் புலமாக நின்று செயற்படுவதன் மூலம் பெண் பிரதிநிதித்துவத்தைப் பெறக் கூடியதாக இருத்தல் வேண்டும். இன்றைய தேர்தல் நடைமுறையானது அதிகளவு செலவுத்தன்மையினைக் கொண்டதாக காணப்படுகின்றது. எனவே அரசியல் கட்சியானது அப்பெண் வேட்பாளருக்கு தேர்தல் செலவினை ஈடுசெய்யக்கூடிய வழிவகைகளைச் செய்ய வேண்டும். அப்பெண் வேட்பாளரின் வெற்றியை உறுதிப்படுத்தக்கூடியதாக இருத்தல் வேண்டும்.

கல்முனை முஸ்லிம் பிரதேசமானது தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகத்தினர் இறுக்கமான கலாசார பின்னணியைக் கொண்டதாகும். இந்நிலையில் இவ் இறுக்கமான கலாசாரத்தன்மைகளை தகர்த்தெறிந்து பெண்களால் அரசியலில் போட்டியிட முடியாத சூழ்நிலை காணப்படுகின்றது. எனவே இப்பிரதேச

மதப்பெரியார்கள், சமூக ஆர்வலர்கள், புத்துஜீவிகள் மற்றும் முக்கியஸ்தர்கள்பெண்களின் கலாசார பின்னணிக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் போட்டியிடுவதற்கான அனுமதியை வழங்கி அப்பெண்ணின் வெற்றிக்கு முழு மூச்சாக தொழிற்பட வேண்டும்

கொள்கை தீர்மான செயற்பாடுகளில் பெண்களின் கருத்துக்களை உள்வாங்க வேண்டும்.அதாவது கிராமிய அபிவிருத்தி சங்கங்கள், பாடசாலை அபிவிருத்தி சங்கம், சிவில் சமூகம், தன்னார்வ தொண்டு நிறுவனங்கள் என்பவற்றில் பெண்களை உள்வாங்குவதுடன் அவர்களது கருத்துக்களுக்கும் முக்கியத்துவம் கொடுத்தல் வேண்டும்.

**முடிவுரை(CONCLUSION)**

ஜனநாயகம் என்பது மக்களின் ஆட்சியைக் குறிக்கின்றது. ஒரு நாட்டினுடைய ஜனநாயகப் பண்புகளில் மிக இன்றியமையாத பண்பாக அரசியல் பங்குபற்றுதலைக் குறிப்பிடலாம். கல்முனை முஸ்லிம் பிரதேச செயலகத்தில் பெண்களின் அரசியல் பங்குபற்றுதல் இன்மைக்கான காரணங்களாக விழிப்புணர்வின்மை, அரசியல் கட்சிகள் முன்னுரிமைப்படுத்தாமை, குடும்பசூழ்நிலை,பெண்கள் ஆதரவு வழங்காமை, கலாசாரப் பின்னணிஇமகளிர் சங்கங்களின் வினைத்திறனற்ற செயற்பாடு போன்ற விடயங்கள் மூலம் அறிய முடிகின்றது. அரசியல் விழிப்புணர்வினை ஏற்படுத்தல், பெண்களை ஊக்கப்படுத்தல், அரசியல் கட்சிகள் ஊக்குவித்தல், கலாசார ரீதியில் ஊக்குவிப்பு வழங்கல் போன்றவற்றை மேற்கொள்வதன் பெண்களின் அரசியல் பங்குபற்றுதலை பேணவும் முடியும்.

## உசாத்துணைகள் (REFERENCES)


01. சர்ஜுன்.ஏ, றிபான். ஏ.எம், (2011), **சமகால அரசியல் எண்ணக்கருக்கள்**, சாந்தியில்ல வெளியிட்டகம்.
02. சரவணன், என். (2002). **இலங்கை அரசியலில் பெண்களும் பெண்களின் அரசியலும்** கொழும்பு : மூன்றாம் பதிப்பகம்.
03. கிஷாசாலி மன்றோ, ஜெயவர்தன,சூழனி கொடிகார, (2003)***,இலங்கையில் பெண்களும் ஆட்சிமுறையும்.*** இனத்துவ கற்கைக்கான மோதல் நிலையம்
04. இர்பான், எம்.ஐ.எம்**,இலங்கையில் பெண்களின் அரசியல் பங்களிப்பும் பெண்கள் எதிர்கொள்ளும் சாவல்களும், அரசியல் கட்சிகளில் பெண்களின் நிலையும்** களவெட்டி சஞ்சிகை, தமிழ் சங்கம், இலங்கை தென் கிழக்குப் பல்கலைக்கழகம்
*05.* **இலங்கையில் உள்ளூராட்சி ஓர் அறிமுகம்**, *தென்னாசிய ஒத்துழைப்பு அமைப்பு, இலங்கை*